[1986 நவம்பர் 21

நிலக்கரி விலை உயர்வினால் மின் உற்பத்தி செலவு அதிகரிப்பு.

140—(*வினா எண். 8414)—திரு. கு. ரமணி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்மையில் மத்திய அரசு நிலக்கரி விலையை உயர்த்தி உள்ளதால் மின் வாரியத்திற்கு அனல் மின் நிலையங்களில் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உயர்த்தப்பட்ட நிலக்கரி விலையின் அடிப்படையில், 1985-86 ஆம் ஆண்டு, சனவரி 1986 முதல் மார்ச்சு 1986 முடிய தமிழ்நாடு மின் வாரியம் நிலக்கரி வாங்குவதற்கு அதிகமாகச் செலவிடும் தொகை ரூ. 243.27 இலட்சம் ஆகும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கங்கள் பூராவும் தேசிய மயமாக்கப்பட்டவை. இங்கே நம்முடைய மின்சார வாரியத்தினால் உற்பத்தி பண்ணக்கூடிய மின்சாரமும் தேசியமயமாக்கப்பட்ட மின்சாரம் தான். ஒவ்வொரு தரமும் நிலக்கரியின் விலை உயரும் போது அதிகமாக செலவு ஏற்படுகிறது. இப்போது 243 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. (குறுக்கீடு) லட்சம் தானா சரி. 2 கோடியே 43 லட்சம் செலவழிக்கப்பட்டது. இப்படி நிலக்கரியின் விலை ஏறிக்கொண்டே போவது என்பது அப்படி முழுவதும் ஜனங்கள் தலையில்தான் போய் விடியும். ஆகவே, தேசிய மயமாக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்திலிருந்து இன்னொரு தேசிய மயமாக்கப்பட்ட ஸ்தாபனத்திற்கு சப்ளை பண்ணும் பொருள்களுக்கு, பெருத்த லாபத்தை எதிர்பார்க்காமல், ஒரே நியாயமான விலையில் சப்ளை பண்ண வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு ஏற்ப எப்படி சிமெண்ட், ஸ்டீல், ஆயில் போன்ற பொருள்களுக்கு ஒரே விதமான விலை இந்தியா பூராவும் இருக்கின்றதோ அதே போன்று நிலக்கரிக்கும் இந்தியா பூராவும் இருக்க வேண்டும்.

1986 நவம்பர் 21]

அதுவும் குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட, தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு, நிலக்கரி வழங்குவதிலே, இந்தக் கொள்கையை கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலக்கரி, எண்ணெய் ஆகியவற்றின் விலைகள் அடிக்கடி உயர்வதன் காரணமாக, மாநில அரசுகள் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் நிதிப் பற்றாக்குறைக்கு ஆளாக்கப்படுகின்றன. ஆகவே அப்படி நிலக்கரி போன்ற இன்றியமையாத பொருள்களின் விலையை மாற்றும் போது, மைய அரசு மாநில அரசுகளை கலந்து தான் செய்ய வேண்டும் என்று நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா? அத்தோடு இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்படுகிறபோது, மைய அரசிடம் இருந்து மானியமோ அல்லது வேறு வகையில் சலுகையோ பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரம் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கு தேவையான இடு பொருள் அல்லது மூலப் பொருள்கள்—அதாவது நிலக்கரி போன்றவை—வழங்கப்படுவதற்கு சப்சிடி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட மாநிலங்களிலேயிருந்து நிலக்கரி கொண்டு வர டன் ஒன்றுக்கு 350 ரூபாய்க்கு மேல் போக்குவரத்துச் செலவே ஆகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, எப்படி தமிழ்நாட்டில் சிமெண்டிற்கும் இரும்புக்கும் ஒரே விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அது போல வட மாநிலங்களிலிருந்து நிலக்கரியைக் கொண்டு வரும்போதும் அதற்கு ஒரே விலையை நிர்ணயித்துக் கொண்டு வர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு ஏற்கனவே பதில் சொல்லியாகிவிட்டது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : ஏற்கனவே இதுபற்றி விடையளித்தாகிவிட்டது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான விலையை, அதுவும் குறைந்த நியாயமான விலையில் ஏற்படுத்திக் கொண்டால் நல்லது என்ற கருத்தை வற்புறுத்தி வருவதாக மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படி நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயித்தாலும் கூட, பீகார், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் இருக்கும் படியான கரியை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்கு அதுவும் கன்னியாகுமரியின் கடைசி வரையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு நிச்சயமாக பெரும் அளவுக்கு அதனுடைய செலவு இருக்கும். ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்த டிஸ்டன்ஸ் கருதி—நம்முடைய தவறில்லை, நாடு பெரியதாக இருப்பதால் வரக்கூடிய நிலை அது—கன்சஷன் ரேட்டில் நமக்கு நிலக்கரியைத் தரும்படி எந்தவிதத்திலாவது மத்திய அரசை மேலும் வற்புறுத்து வதற்கு மாநில அரசு முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி குறிப்பிட்டு தமிழ்நாடு நிலக்கரி உற்பத்தி செய்யப்படும் சுரங்கத்தி லிருந்து அதிக தூரத்தில் இருக்கிறது என்பதால் 'பிரைட் சார்ஜிற்கு' கன்சஷன் கொடுக்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்தி இருக்கிறது. மேலும் இதுபற்றி வலியுறுத்தும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * உறுப்பினர் எழுப்பிய பிரச்சினையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையம்.

141—(*வினா எண். 8701)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அனல் மின் நிலையம் உற்பத்தியை எப்போது தொடங்கும் ?

(ஆ) அதன் உற்பத்தி அளவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நான்கு பிரிவுகளின் இயக்கம் முறையே டிசம்பர் 1986, சூன் 1987, டிசம்பர் 1988 டிசம்பர் 1989 ஆகிய காலங்களில் இயக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.